



தி.மு.க. இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டின் வெற்றிக்காக தமிழ்நாடெங்கும் அயராது உழைத்து வரும் இளைஞர் அணியின் மாவட்ட மாநகர மாநில அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், அன்பகத்தில் நேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், மாநாட்டையொட்டி மேற்கொள்ள வேண்டிய பணிகள், தொலை தூரத்தில் இருந்து வருவோரின் பயணத்திட்டமிடல் தங்குமிடம் மாநாட்டு நாளன்று கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். பாசிஸ்ட்டுகளின் முடிவை தெற்கிலிருந்து எழுதிடும் வகையில், கடமை கண்ணியம் கட்டுப்பாடுடன் செயல்பட்டு இளைஞர் அணி மாநாட்டை நாடே திரும்பி பார்த்திடும் வகையில் நடத்திடுவோம் எனக் குறிப்பிட்டார்.






சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் 4–ஆவது மாநில மாநாடு மற்றும் 20 –ஆவது ஆண்டு விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று நடைபெற்றது. இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு நீட் நெக்ஸ்ட் என்ற நுழைவுத்தேர்வுகளின் மூலம் மருத்துவக்கல்வி யாருக்குத் தேவை என்பதைவிட யாருக்குத் தேவையில்லை என்பதை தீர்மானிக்கும் பாசிஸ்ட்டுகளின் பில்ட்டர்களை ஒழித்துக்கட்டுவோம் என்று உரையாற்றினார். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரை – கவிதை – குறும்படப் போட்டிகளில் வென்ற மருத்துவர்களுக்குப் பரிசுகள் – சிறந்த மருத்துவர்கள் – இளம் மருத்துவர்களுக்கு விருதுகளை வழங்கி ”சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பணிகள் மென்மேலும் சிறக்கட்டும் என்று வாழ்த்தினார். அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்திய கம்யூ–கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், சமக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கப் பொதுச் செயலாளர் டி.ஆர். ரவீந்திரநாத் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டார்கள்.

### கத்தார் நாட்டில் பயிலும்

# தமிழ்நாட்டு மாணவர்களுக்கு - தமிழ் பாடப் புத்தகங்கள் தட்டுப்பாடு!

## நா.சதக்கத்துல்லா உள்ளிட்டோரிடம் மனுவினைப் பெற்று - விரைவில் தீர்த்து வைப்பதாக - பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் லியோனி உறுதி!

தோகா, நவ. 27 -

கத்தார் வருகை புரிந்திருந்த தமிழ்நாடு பாட நூல் கழகத் தலைவர் திண் டுக்கல் ஐ. லியோனியிடம் கத்தார் அயல் தி.மு.க. பொறுப்பாளர் நா.சதக்கத்துலலா மற்றும் நிர்வாகிகள் சார்பில் புத்த கம் வேண்டி கடிதம் கொடுக்கப்பட்டது.

கத்தாரில் படிக்கும் தமிழ் நாடு மாணவர்களுக்கு தமிழ் புத்தகம் கிடைப்பதில் தட்டுப்பாடு இருப்பதை பெற்றோர்கள் கத்தார் அய லக திமுக நிர்வாகிகளிடம் தெரிவித்தனர். அதன் அடிப் படையில் அங்கு வருகை புரிந்த தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனியிடம் கத்தார் அயலக தி.மு.க. சார்பில் புத் தகம் வேண்டி கோரிக்கை வைக்கப்பட்டது.

கடிதத்தை படித்து விட்டு உடனடியாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொ ழியிடம் ஆலோசித்து பற்றாக்குறையை உட னடியாக தீர்த்து வைப் பதாக உறுதி அளித் தார்.

இதன் அடிப்படை யில் வரும் கல்வி யாண்டு முதல் கத்தார் அயலக தி.மு.க. மூல மாக பள்ளி மாணவர்க ளுக்கு தமிழ்ப் புத்தகங் கள் கிடைக்கும்.

இந்த நிகழ்வின் போது கத்தார் அயலக தி.மு.க. பொறுப்பாளர் நா.சதக்கத்துல்லா, அப்துல் ரஷீத், யாழினி குமார், பாலாஜி, மதன்குமார் விவேக் சத்தியராஜ் ஒருங்கி ணைநத தமிழர் பேரவை நிர்வாகிகள் வலியுல்லா இப் ராஹிம் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### தலைமை: மு. இ. ஏழுமலை! முன்னிலை: நந்தனம் கே.மதி எம்.சி.!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்குகிறார்!

சென்னை, நவ.27

மாவட்டச் செயலா ளர் மயிலை த. வேலு வழிகாட்டுதலின் படி, பகுதி செயலாளர் நந்த னம் கே. மதி எம்.சி. முன் னிலையில், வட்ட செய லாளர் மு.இ.ஏழுமலை தலைமையில், இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46வது பிறந்த நாள் விழா வினை முன்னிட்டு, இன்று (27.11.2023 திங் கள்கிழமை) மற்றும் ஒரு மாதம் முழுவதும் 27.11.23 முதல் 27.12.2023 வரை, ஞாயிற்றுக்கிழமை தோறும், 123வது வட்ட கழகத்தின் சார்பில், வட்ட கழக முழுவதும் கழக மூத்த முன்னோடிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகள், அணிக ளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர் கள், மற்றும் கழக உடன் பிறப்புகள், ஆகியோர் ஏற்பாடு செய்து இருக் கும், தெருக்கள் தோறும் நடைபெறும் நிகழ்ச்சிகளில், கழக கொடி ஏற்றி, இனிப்பு கள், அறுசுவை உணவு கள் மற்றும் நல திட்ட உதவிகள் வழங்கப்படு கிறது.

### பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் தலைமையில் - திருவொற்றியூர்

# 14 (அ) வட்டத்தில் வாக்காளர் சேர்ப்பு முகாம்!

## ஏகா. கார்த்திகேயன் முன்னிலை!

சென்னை, நவ.27-

தலைமைக் கழக உத் தரவுப்படியும், திரு வொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பி னர் மாநில மீனவர் அணி துணைத் தலை வர் கே.பி.சங்கர் ஆலோசனைப் படி யும், சென்னை வடகி ழக்கு மாவட்டம் திரு வொற்றியூர் கிழக்குப் பகுதி 14வது 'அ' வட் டத்தில் திருத்தங்கல் நாடார் மேல்நிலைப் பள்ளி மற்றும் சி. எஸ்.ஐ. செயின்ட் ஆரம்பப் பள்ளி ஆகிய பள்ளிகளில் வாக்கா ளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் நீக்கு தல் பணிகள் தலைமை பொதுக்குழு உறுப்பி னர் இரா. முருகேசன் தலைமையில் 14வது 'அ 'வட்டச் செயலாள ரும், சென்னை வடகி ழக்கு மாவட்ட சுற்றுச் சூழல் அணியின் துணை அமைப்பாளரு மான ஏகா.கார்த்திகே யன் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட கழகப் பிர திநிதிகள் எம்.எத்தி ராஜ் என்கிற குட்டி, ஆர்.அப்துல் சலீம், வி. இமயவர்மன், வட்ட அவைத் தலைவர், வட்ட பிரதிநிதி ஆர். டைலர் பாபு, வட்ட துணைச் செயலாளர், ஞா.ஜார்ஜ், எஸ்.மைக் கேல், எஸ்.தேன் மொழி மற்றும் பாக முகவர்கள் நேவிராஜ், எஸ்.கோபி, வினோ லியா, எஸ்.பந்தய சேகர், ஆர்.தனபால், ஏ.சபா, கே.சண்முகம், எம்.சுரேஷ், வி.விமல் உள்ளிட்டோர் வாக் காளர் முகாம் சரிப் பார்க்கும் பணியில் கலந்துகொண்டு சிறப் பித்தனர்.

